[1973 மார்ச் 15

மன்னியாற்றின் குறுக்கே பாலம்.

* 375 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

மாயூரம் தாலூகாவில் கடலங்குடி, பூதங்குடி, ஆகிய கிராமங்களை இணைக்க, மன்னியாற்றுக்குக் குறுக்கே foot bridge ஒன்று அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. எஸ். வடிவேல் : மாயூரம் தாலூகாவுக்கும் சீர்காழி தாலூகா வுக்கும் இணைப்பாக உள்ள இடம் இந்த மன்னியாற்றுப் பாலம். அந்தப் பாலம் இருந்தால் அரை மணியில் செல்லலாம். இப்போது ஒன்றரை மணி ஆகிறது சுற்றிப் போவதற்கு. ஆகவே, துரிதமாக அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கடலங்குடி பூதங்குடி கிராமங்களை இணைக்க திருப்பனந்தாள் என்ற ஊரின் தெற்குச் சாலையில் பூதங்குடி என்ற ஊரிலே ஓடுகின்ற மன்னியாற்றில் தரைப் பாலம் கட்ட தோராயமாக 30,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. 40,000 ரூபாய்க்கு உட்பட்டு இருக்கும் காரணத்தால் இந்தப் பணியை ஊராட்சி ஒன்றியந்தான் செய்ய வேண்டும் என்று பொதுப் பணித் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி அரசி னுடைய பரிசீலனைக்கு எதும் செயற்குறிப்பு வரவில்லை.

திரு. எஸ். வடிவேல் : ஊராட்சி ஒன்றியமே இதைத் கட்ட வேண்டுமென்றால் கையில் பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். இதனால் ஜனங்களின் போக்குவரத்துக்குத்தான் தடையாக இருக்கிறது. ஆகவே, அரசு எப்படியாவது நடவடிக்கை எடுத்து அந்தப் பாலத்தைக் கட்டித்தர முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியம் செய்கின்ற பணிகளில் இதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வட்டார வளர்ச்சிக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வேண்டுமானால் சொல்லலாம்.

வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பீடித் தொழிலாளர்கள்.

* 376 வினு.—திரு கே. எ. வகாப்) :
திரு. என். கிட்டப்பா) : } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காட்டில் உள்ள பீடித் தொழிலாளர் குறைகளை கவனிக்க குழு எதும் நிறுவப்பட்டுள்ளதா ?

(இ) ஆம், எனில், அதில் அங்கம் வகிப்பவர் யார், யார் ?

1973 மார்ச் 15]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் பரிசீலிக்க குழு எதும் நியமிக்கவில்லை. என்றாலும் பீடித் தொழில் மற்றும் உணவகங்கள், தோல் பதனிடுதல், திரைப்படத் தொழில் மற்றும் சில முறையான அடிப்படையில் தொழிற்சங்கம் அமையாத தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளைப் பரிசீலனை செய்ய பொதுக்குழு ஒன்றை 1—2—1973-ல் அரசு நியமித்துள்ளது.

(இ) அதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர் :

தலைவர் :

தொழிலாளர் துறை ஆணையாளர், சென்னை.

அங்கத்தினர்கள் :

1. திரு. கே. சுப்பு, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், துரைசாமிபுரம், ராசபாளையம்.

2. திருமதி. டி. என். அனந்தநாயகி, எம். எல். ஏ., சென்னை.

3. திரு. எம். வி. நாராயணசாமி, எம். எல். ஏ., சென்னை.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

4. திரு. வி. கண்ணன், பொதுச் செயலாளர், வட ஆர்க்காடு பீடித் தொழிலாளர் சங்கம்.

5. திரு. தொழிலன் (வைரவன்), தமிழ்நாடு பொதுப்பணித்துறை, வேலை நிதி ஊதிய பணியாளர் சங்கம், திருநெல்வேலி.

6. திரு. எம். எஸ். சிவசாமி, எம். பி., தூத்துக்குடி.

7. செயலாளர், தீப்பெட்டி தொழிலாளர் சங்கம், சிவகாசி.

8. திரு. வி. நடராஜன், தலைவர், விஸ்வகர்மா தொழிலாளர் சங்கம், கடலூர்.

9. திரு. வி. பாலகிருஷ்ணன், மதுரை கைத்தறித் தொழிலாளர் சங்கம்.

வேலை தருவோர் பிரதிநிதிகள் :

10. திரு. மொகமட் யாகூப், தலைவர், சென்னை மாகாண பீடித் தொழிலதிபர்கள் சங்கம், சென்னை.

11. திரு. எம். நீலகண்டன், சென்னை-18.

12. திரு. எஸ். எஸ். பி. ரங்கசாமி நாடார், தூத்துக்குடி உப்பு உற்பத்தியாளர்-விற்பனையாளர் சங்கம்.

13. திரு. என். சோமசுந்தரம், தென்னிந்திய சுதேசி தீப்பெட்டி தொழிலாளர் சங்கம், சாத்தூர்.

14. திரு. ஹரீந்த்ர எம். மேத்தா, தமிழ்நாடு வெள்ளி, வைரம் நகை வியாபாரிகள் சம்மேளனம், சென்னை.

15. திரு. ஈ. ஏ. ஆர். மாரியப்பன், அம்மாபேட்டை கைத்தறி நெசவுத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி-விற்பனை சங்கம், சேலம்.

திரு. கே. ஏ. வகாப் : பீடித் தொழிலாளர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கும் காரணத்தால் அவர்களுக்கென்று தனிக் குழு அமைக்க அரசு முன்வருமா ? அந்தப் பீடித் தொழிலாளர்கள் விஷயமாக வழக்கு ஒன்று இருப்பதாக சொல்லப்படுகிறது. அதையும் காம்ப்ரமைஸ் செய்ய குழுவை ஏற்படுத்தி வழக்கை வாபஸ் பெற அரசாங்கம் முயற்சித்து தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு போன்ற வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி ஏற்கெனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே அங்கம் வகிப்பவர்கள் —

Chairman—

Deputy Commissioner of Labour, Madras.

Independent Member—

Assistant Director of Statistics (Marketing and Intelligence).

Employers' representatives.—

1. V. J. Abdul Kareem, Partner, Goat Mark Beedi, Vellore.

2. M1. Yacoob, Proprietor, Rustum Beedi, Madras.

3. Mr. Amrudeen, Managing Partner, Hateen Beedi, Tiruchirappalli.

4. T.P. R. C. Kannan, Chain Mark Cigar, Tiruchirappalli.

5. Manager, T. P. Chockalal Ram Sait Beedi, Mukkudal.

Employees representatives—

1. Aladi Aruna, M.L.A.

2. M. P. Sarathy, M.L.A.

3. V. Kannan, Secretary, North Arcot District Beedi Workers' Association, Vellore (N.A. District).

4. R. Karuppiah, President, Tiruchi District United Beedi Workers' Union, Tiruchirappalli.

5. A. M. Govindarajan, Thanjavur.

The last meeting was held on 9th and 10th March 1973 at Tirunelveli.

The next meeting will be held on 10th and 11th at Madras.

இவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும் நிர்ணயிப்பார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தத் தொழிலாளர்களுக்குக். குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டு ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. எப்போது அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை வெளியிடும் ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சென்ற கூட்டம் மார்ச் 9, 10 தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்றிருக்கிறது. வருகிற 10, 11 தேதிகளில் அடுத்த கூட்டம் சென்னையில் நடைபெற இருக்கிறது. விரைவில் அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எ. க. துரைசாமி : பீடித் தொழிலாளர் மத்தியில் இப்போது ஏற்பட்டிருக்கும் கூலி விகிதம் மிகுந்த மனக்குறையை ஏற்படுத்தி இருக்கிறது. வெகு சீக்கிரமாக அந்த விகிதாசாரத்தை உயர்த்தி அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே சொன்னது போல் விரைவில் அந்தக் குழு தனது அறிக்கையைத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கனவே சட்ட சபையில் நிறைவேற்றிய பீடித் தொழிலாளர்கள் சட்டத்தில் செக்ஷன்கள் 6, 7 செல்லாது என்று ஹைகோர்ட் தீர்ப்பளித்து ஆறு மாதமாகியும் சர்க்கார் சட்டத்தையும்